# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 8 JULY இதழ் 7




வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. "கிறிஸ்துவின் சபை" 1
2. மாயவித்தைக்காரனான சீமோனுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை மறுக்கப்பட்டது ஏன்? 11
3. (பெண்கள் பகுதி) பொறாமை - போட்டி 16
4. இயேசுவை தேவனுடைய குமரன் என்று நான் ஏன் விசுவாசிக்கிறேன்? - (2) 20
5. இரட்சிக்கப்பட்ட நாம் என்ன செய்யவேண்டும்? 24
6. யெகோவா சாட்சிகள் - 6 கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்! 26
7. அவர்கள் உங்கள் கதவைத் தட்டும்போது 30

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 8 JULY Issue-7

## ஆசிரியவுரை

# "கிறிஸ்துவின் சபை"

கடந்த மே - மாதத்தின் இறுதியில் எனது சகோதரனின் திருமணம் ஈரோட்டில் நடைபெற்றது. அப்பொழுது, திருமண அரங்கத்தின் மேடையில் ரோமர் பதினாறம் அதிகாரம், 16-ம் வசனத்தின் பிற்பகுதியாகிய, "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்பதை ஆங்கிலத்தில், "CHURCHES OF CHRIST SALUTE YOU" என்று அனைவரும் பார்க்கும் வண்ணம் எழுதியிருந்தோம் கிறிஸ்துவின் சபை உபதேசத்தில், எங்களுக்கிருக்கும் ஆழமான நம்பிக்கையை, மிக நன்றாக அறிந்திருந்த எங்கள் நெருங்கிய உறவினர் ஒருவர், என்னிடம் வந்து, 'CHURCHES OF CHRIST' என்று எழுதப்பட்டிருப்பது சரியா? "CHURCH OF CHRIST" என்றுதானே, நீங்கள் அழைத்துக் கொள்வீர்களென்று மிகுந்த அக்கறையோடு கேட்டார்.

அதாவது, CHURCH OF CHRIST என்றால் "கிறிஸ்துவின் சபை" என்றும், CHURCHES OF CHRIST என்றால், "எல்லாக் கிறிஸ்தவ சபைகளும்" என்பது அவர் புரிந்து கொண்ட பொருள். அக்கருத்தினடிப்படையில் மேடை அலங்கரிப்பு செய்தவர். தவறாக எழுதி விட்டார் எனக்கருதி, திருத்தம் செய்ய என்னிடத்தில் பிரச்னையைக் கொண்டு வந்தார். அப்பொழுதிருந்த அவசரத்தில் எழுதியது "சரிதான்" என்று ஒரு வார்த்தையில் பதிலளித்து முடித்து விட்டேன். அங்கே பன்மைப் பொருளில் சொல்லப்பட்டிருப்பது உலகெங்கும் உள்ள "கிறிஸ்துவின் சபைகளை" என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நம்மைச் சுற்றியுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தைச் சற்று உற்று நோக்கினால், மிகப் பெரும்பாலானவர்கள், வேத வாக்கியங்களை சரியாகப் புரிந்து கொள்ளாமல் தடுமாறிக் கொண்டுள்ளதை உணரலாம். இயேசுக் கிறிஸ்து தாமே வாக்களித்துக்கட்டின சபையாகிய "கிறிஸ்துவின் சபைக்கும்", வேதத்தில் சொல்லப்படாத பல விநோதமான பெயர்களால் இயங்கும் 'கிறிஸ்தவ சபைகளுக்கும்" வேறுபாடு காண முடியாமல், நாட்களை விரயமாக்கிக் கொண்டுள் ளனர். கிறிஸ்துவின் பெயரோடும், அவருடைய உபதேசத்தோடும் ஏதாவது ஒருவகையில் தொடர்பிருந்தால் போதும் அவையனைத்தும் "கிறிஸ்துவின் சபைகள்" என்று கிறிஸ்தவ சமுதாயத்தால் அங்கீகரிக் கப்பட்டு விட்டன. இது எப்படி நீதியாகுமென்று எனக்கு விளங்க வில்லை. இந்த அங்கீகரிப்பாளர்கள் 'மின்னுவதையெல்லாம் பொன்' என்றும், "வெளுத்ததை எல்லாம் பால்" என்றும் சொன்னால் ஏற்றுக் கொள்வார்களா? பொன்னுக்கும், பாலுக்கும் உண்டான குணங்கள் எங்கேயென்று கேட்கமாட்டார்களா? எங்களை ஏமாற்றுகிறீர்களா என்று எரிச்சல் அடையமாட்டார்களா? ஏமாற்ற முயன்றவரைப் பற்றி ஊருக்குள் சொல்லாமல் விடுவார்களா? இப்படிக் கேள்விகளை அடுக்கும் இதே சமுதாயம், ஆன்மீக காரியங்களைக் குறித்து யார் எப்படிச் சொன்னாலும், வாய்மூடி மௌனிகளாக இருந்து அப்படியே ஏற்றுக் கொள்வதின் மர்மம் என்ன? கைமேல் பலன் இப்பூமியில் இல்லையென்பதாலா?

சரி, முதலாவது "சபை" என்ற தமிழ் வார்த்தை "எக்லீசியா" (Ek-klesia) என்ற கிரேக்க பதத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள தென்பதை அறிந்துகொள்ள வேண்டும். Ekklesia என்பது ஒரு கூட்டு வார்த்தை. "EK" என்பதற்கு "அதில் இருந்து" என்றும், Klesis - என்ப தற்கு "ஒர் அழைப்பு" என்றும் பொருள். ஆக, சபை என்பது "அழைக் கப்பட்டவர்களால்" ஆன ஒன்று. அதாவது, அழைக்கப்பட்ட கூட்டமாகிய மக்களைக் குறிக்கிறது. அநேகர், தவறாக எண்ணிக் கொண்டிருப்பதைப் போல், 'சபை' என்பது கட்டிடம் அல்ல.

சபை (or) சபைகள் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் நூற்றுக்கு மேலாக இடம் பெற்றுள்ளது. இந்த இராஜ்யமாகிய சபையானது, குறிப் பிடப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் நான்கு வகையான அர்த்தத்தோடு சொல்லப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| (i) | உலகளாவியது | மத். 16:18, எபே. 5:23 |
| (ii) | பிராந்திய அளவிலானது | கலா. 1:2 |
| (iii) | சபை அளவிலானது | I தெச. 1:1, வெளி. 2 |
| (iv) | கூடி வருதல் | I கொரி. 11:18 |

ஆனால், எந்த இடத்திலுமே, சபை என்பது ஒரு "பிரிவு" என்றோ அல்லது பிரிவினைக் கூட்டமென்றோ சொல்லப்படவில்லை. 'சபை' என்பது பற்றி மானிடம் கொண்டிருக்கும் கருத்துக்கும், வேதாகமம் கொடுக்கும் விளக்கத்திற்கும் பிரமிக்கத்தக்க வேறுபாடு உண்டு.

இப்பொழுது, பரிசுத்த வேதாகமம் சொல்லும் ஒரே சபையின் சில பண்புகளைப் பற்றிப் பார்ப்போம்.

## 1. கிறிஸ்துவின் சபை - திட்டமிடப்பட்டது.

இரட்சகராகிய இயேசுவின் பிறப்பிற்குப் பின், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அமைப்பு அல்ல கிறிஸ்துவின் சபை. மாறாக, ஆதி. 1:1-க்கு முன்பாகவே அது இருந்தது. ஆம், நாம் காணும் வானமும், பூமியும் உண்டாக்கப்படுவதற்கு முன்பாகவே அது தேவனுடைய எண்ணத்திலும், திட்டத்திலும் நிச்சய மாகவே இருந்தது. அப்போஸ்தலன் பவுலடியாரால், சபையைப் பற்றி மிக நேர்த்தியாக எழுதப்பட்ட புத்தகமாகிய எபேசியரில், "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதித் தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்க ளுக்கும் அதிகாரங்களுக்கும், அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வரும் பொருட்டாக" (எபே. 3:9,10) என்று எழுதியுள்ளார். அதாவது,

1. சபை - தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியானது என்றும்
2. சபையின் மூலமாக தேவனுடைய ஞானம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது என்றும் கூறுகிறார்.

மனிதன் பாவம் செய்வான் என்பதும், அவனுடைய பாவத்திற்கு விலையாக தேவக்குமாரன் பலியாகக் கொடுக்கப்பட வேண்டுமென் பதும், சபை பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்படும் என்பதும் தேவனுக்குத் தெரிந்தே இருந்தது.

ஆக, சபை என்பது, பின்னாளில், காலத்தின் கட்டாயத்தால் ஏற்படுத் தப்பட்ட ஒரு அமைப்பு அல்ல. 'குரங்கு பிடிக்கப் போய் பிள்ளையார் பிடித்த கதையாயிற்று' என்று சொல்வார்களே அதைப்போல, பூமிக் குரிய இராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பி, அதில் தோற்றுப்போனதால், தற்காலிகமாக ஏற்படுத்தபட்டதுமல்ல சபை.

சபை, அநாதித்தீர்மானத்தின்படியானது. சபை தேவனுடைய நித்திய நோக்கத்தில் இருந்தது. சபை தேவனுடைய எண்ணத்தில் இருந்தது. அது, மாத்திரமல்ல சபையானது, சர்வ வல்லவரால் திட்டமிடப்பட்டது. இவ்வளவு சிறப்புகள் பொருந்திய அந்த சபை தான் "கிறிஸ்துவின் சபை".

## 2. கிறிஸ்துவின் சபை - முன்னுரைக்கப்பட்டது

சபை, புதிய ஏற்பாட்டின் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதல்ல என்பதற்கு வேறொரு பலமான சான்று, தீர்க்கதரிசனங்கள் அதைக் குறித்துக் கொடுக்கும் பலமான சாட்சிகள்.

கிறிஸ்து பிறப்பதற்கு, சுமார் 535 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தானியேல் தீர்க்கன்,"அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன், என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; . . . அப்படியே அது, அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் (தான். 2:44) என்று சபையாகிய இராஜ்யத்தைக் குறித்து முன்னறிவிக்கிறார்.

இயேசுக் கிறிஸ்துவுக்கு 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாய தீர்க்கதரிசி,"கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசேலமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசா. 2:2,3) என்று கூறுகிறார். இது சபையைப் பற்றிய ஒரு அருமையான தீர்க்கதரிசனம். குறிப்பாக, எருசேலமிலிருந்து தான், சுவிசேஷம் செல்லுமென்று எவ்வளவு துல்லியமாக முன்னறிவித்திருக்கிறார் பாருங்கள். இதே செய்தியை, ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்த மீகாவும் உறுதி செய்கிறார் (மீகா. 4:1,2) ஏசாயா தீர்க்கன், இயேசுவின் கன்னிப் பிறப்பு (ஏசா. 7:14) மற்றும் கிறிஸ்துவின் மரணம் போன்றவற்றையும் முன்குறிக்கிறார் (ஏசா. 53)

மேற்சொன்ன இந்த தீர்க்கதரிசனங்களும் இன்னும் ஏராளமானவைகளும் ஏற்ற காலங்களில் கனகச்சிதமாக நிறைவேறியுள்ளதை நாம் அறிவோம். இவைகள் யாவும் தேவனால் ஏவப்பட்டுக் கொடுக்கப்பட்டவைகள் என்பதற்கு இதைவிடச் சிறந்தசான்று என்ன வேண்டும்? ஆகையால், தேவனுடைய ஏவுதலால், தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த ஒரே சபை "கிறிஸ்துவின் சபை" தான். ஆயிரங்களாகக் காட்சி தரும் எந்தவொரு பிரிவினைச் சபைக்கும் இப்பெருமை கிடையவே கிடையாது.

## 3. கிறிஸ்துவின் சபை - கிரயத்துக்குக் கொள்ளப் பட்டது.

பாவம் எவ்வளவு பயங்கரமானது என்பதைத் தெரிந்து கொள்ள இரண்டு வழிகள் உண்டு.

(i) பாவத்தில் மரிக்கும் ஒருவனுக்குக் கிடைக்கும் நித்திய தண்டனை

(ii) பாவத்திலிருந்து ஒருவனை விடுதலையாக்க தேவன் கொடுத்த விலை.

ஆம், தேவனுடைய ஞானத்தால் திட்டமிடப்பட்ட சபைக்கு, முன் ஒரு போதும் கொடுக்கப்படாத மிகப் பெரும் விலை கொடுக்கப்பட்டது.

"ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" (அப். 20:28)

அப்போஸ்தலன் பேதுரு, "உங்கள் முன்னோர்களால் பாரம் பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (1 பேது. 1:18,19) என்கிறார்.

தேவன் நம்மை இரவலாகப் பெறாமல், முழுக் கிரயத்தையும் கொடுத்து, தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார். அதைத்தான் பவுல், கொரிந்தியருக்கு எழுதும் பொழுது, "நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும், கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்களென்றும்" அழகாகக் கூறுகிறார் (1 கொரி. 6:19,20)

இயேசுக்கிறிஸ்து சிந்தின இரத்தம் முழுவதும், அவருடைய சபைக்காக மாத்திரந்தான் சிந்தப்பட்டதேயொழிய, மற்றபடி, மக்களுடைய அறியாமையை மூலதனமாக வைத்து இயங்கும் கிறிஸ்தவ சபைகளுக்கு அல்ல. "என் பரமப்பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" (மத். 15:13) என்று இயேசுக் கிறிஸ்து மிக வெளிப்படையாகச் சொல்லியுள்ளபடியால், எந்தவொரு பிரிவினைச் சபையும் அவர் சிந்திய இரத்தத்தில் ஒருசொட்டு இரத்தத்திற்குக் கூட உரிமை கொண்டாட முடியாது.

## 4. கிறிஸ்துவின் சபை - பிரசங்கிக்கப்பட்டது.

நான்காவதாக, கிறிஸ்துவின் சபை, பலமாகப் பிரசங்கிக்கப்பட்டதற்கு போதுமான சான்றுகள் வசனத்தில் உண்டு.

இயேசுக்கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று, பிசாசால் சோதிக்கப்பட்டதற்குப் பிறகு, இராஜ்யமாகிய சபையைக் குறித்துப் பேசினார்.

"அது முதல் இயேசு : மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத். 4:17) அதற்கு முன்னதாக, "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தான். (மத். 3:2)

அப்போஸ்தலர்கள், ஆலோசனைச் சங்கத்தாரின் கடுமையான எச்சரிப்பையும், அடிகளையும் பொருட்படுத்தாமல், உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்து "தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப். 5:42)

அடுத்து எருசலேமில், சபைக்கு மிகுந்த துன்பம் உண்டானபோது, கிறிஸ்தவர்கள் சிதறப்பட்டுப் போனார்கள். அப்படிச் சிதறிப் போனவர்கள் எங்குந் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்களென்று பார்க்கிறோம் (அப். 8:4) அப்போஸ்தலன் பவுல், கொலோசே பட்டணத்தாருக்கு எழுதும்போது, அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது என்று கூறுகிறார். (கொலோ 1:23)

இவர்கள் எல்லோருடைய பிரசங்கத்தால் ஏற்பட்ட விளைவு என்ன? பெந்தெகொஸ்தே நாளில் நடந்த பிரசங்கத்தால் 3000 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (அப். 2:41) தொடர்ந்து இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் என்று பார்க்கிறோம். (அப். 2:47)

அப். 4:4-ல் "வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது."

அப். 5:14-ல் "திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி, கர்த்தரிடமாக அதிகதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்"

அப். 6:7 "தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்"

சுவிசேஷத்தை விசுவாசித்தவர்களையும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களையும், கர்த்தர் அநுதினமும் தம்முடைய சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். ஆக, அப்போஸ்தலர்கள், முதல் நூற்றாண்டுக் காலத்தில்,"கிறிஸ்துவின் சபை" யைக் குறித்து மாத்திரமே பிரசங்கித்தார்கள்.

## 5. கிறிஸ்துவின் சபை - துன்புறுத்தப்பட்டது

இது தான் உண்மையான சபையெனில், ஏன் இச்சபை துன்புறுத்தப்பட்டது? ஏன், தேவன் தமது குமாரனுடைய சபையைப் பாதுகாக்கவில்லை? என்று சிலர் கேட்கக் கூடும். நம்முடைய தேவன், அதற்குண்டான பதிலை பவுலடியார் மூலம் கொடுக்கிறார். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (II தீமோ. 3:12)

மெய்பக்தியும், துன்பமும் இரண்டறக் கலந்தது. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது.

(i) உண்மைப் பக்தியோடு வாழ்ந்த ஸ்தேவான் "விசுவாசத்திற்காக"க் கொல்லப்பட்ட முதல் இரத்தசாட்சி (அப். 7 அதி)

(ii) எருசலேம் பட்டணத்திலிருந்த விசுவாசிகளுக்கு மிகுந்த துன்பம் ஆரம்பமானது (அப். 8:1)

(iii) ஏரோதுவால் கொல்லப்பட்ட யாக்கோபு, நீதிக்காக மரித்த முதல் அப்போஸ்தலன் (அப். 12:2)

(iv) கிறிஸ்து எனக்கு ஜீவன் என்று வைராக்கியமாய் ஊழியம் செய்த பவுல், லீஸ்திராவில் மரிக்கும் அளவுக்குக் கல்லெறியப்பட்டான். (அப். 14:19)

(v) பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார்கள் (அப். 16. அதி)

இன்னும் வேதாகமம் அல்லாத பிறசரித்திரம் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவின் சபைக்காக வைராக்கியமாக வாழ்ந்து, தங்கள் இன்னுயிரையும் துச்சமென மதித்து இரத்த சாட்சிகளாய் மரித்தவர்களை விபரமாய் வர்ணிக்கிறது. ஆம், அநேகர் மிருகங்களின் தோலால் தைக்கப்பட்டு நாய்களுக்கு முன் போடப்பட்டிருக்கிறார்கள். உயிருடன் தோலுரிக்கப்பட்டிருக்கிறார்கள், உயிரோடு தண்ணீரில் வலுக்கட்டாயமாக மூழ்க்கடிக்கப்பட்டுள்ளார்கள், சிங்கங்களுக்கு இரையாக போடப்பட்டிருக்கிறார்கள், முகங்கள் சிதைக்கப்பட்டு, சிரச் சேதம் செய்யப்பட்டு, தீயிலிடப்பட்டு, சிலுவையிலறையப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

முதல் நூற்றாண்டுக் காலத்தில், சபைக்கு நேர்ந்த துன்பத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. கொடுமைகளும், அடிகளும், அடக்குமுறைகளும், சித்ரவதைகளும் இச் சபையை அழிக்க முடியவில்லை. பரிசுத்தவான்கள் சிந்தின ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நல்ல நிலத்தில் விழுந்த மணிகளாக மாறி, நாட்கள் செல்லச் செல்ல வளர்ந்து பூத்துக் குலுங்கும் விருட்சங்களாக மாறியது. இச்சபை இருபதாம் நூற்றாண்டிலும் வெற்றி நடை போடுகிறது. இதன் இரகசியம் என்ன தெரியுமா? தேவனால் திட்டமிடப்பட்டதும், கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டதும் இச்சபைதான்.

## 6. கிறிஸ்துவின் சபை - வெற்றி கொள்ளும்

இறுதியாக, கிறிஸ்துவின் சபை, இந்தப் பூமியோடு முடிந்து போகக் கூடியது அல்ல. கிறிஸ்துவானவர் தன்னுடைய சபையைக் கட்டுவேனென்று வாக்குக் கொடுத்த பொழுது, "... பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றார். (மத். 16:18)

அப்போஸ்தலன் பேதுரு, "... இயேசுக் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும் படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே, நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1 பேது 1:4) என்கிறார்.

அப்போஸ்தலன் பவுல், கொரிந்தியருக்கு எழுதும்போது, "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால்

கட்டப்பட்ட கைவேலையில்லாத வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்'' (II கொரி. 5:1) என்று கூறுகிறார். மீண்டும் பவுல், ''அதன் பின்பு முடிவு உண்டாகும் அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்'' (I கொரி. 15:24) என்று கூறுகிறார்.

எபிரேய ஆசிரியர், இன்னும் திருத்தமாக, ''ஆதலால் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் என்று எடுத்துரைக்கிறார். (எபி. 12:28)

மேற் சொன்ன வசனங்கள் அனைத்தும், சபையானது மனிதனின் மரணத்தோடும், இந்தப் பூமியோடும் முடிந்து போவதல்லவென்றும் அது நித்தியத்தன்மையைக் கொண்டது என்றும் பட்டவர்த்தன மாகச் சொல்கிறது. சபைக்கு இந்த நித்தியத்தன்மை எப்படிக் கிட்டும்?

சபையும், சரீரமும் ஒன்றே என்று கொலோசேயரில் பவுல் சொல்வதை நாம் பார்க்கலாம் (கொலோ. 1:18) அதே பவுல், எபேசி யரில், ''அவரே (கிறிஸ்துவே) சரீரத்திற்கு (சபைக்கு) இரட்சகராயிருக் கிறார்'' (எபே 5:27) என்று கூறுகிறார். ஆம், மரணத்தை வெற்றி கண்ட அதே இயேசுராஜா, சபையின் இரட்சகராக இருக்கிறார். அந்தக் கிறிஸ்து ராஜா சபையை இரட்சிப்பார். அவர் சபைக்காக தம்மை ஒப்புக் கொடுத்ததற்கு ஒரு நோக்கமுண்டு. அந்நோக்கம் என்ன தெரியுமா? ''கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபே. 5:27) ஒருநாளில், சபையைத் தமக்கு முன்பாக நிறுத்தி, தன்னைப் போலவே சபையும் நித்தியத் தன்மையுடைய தாகும் படி செய்வார். அதில், ஊசியின் முனையளவும் சந்தேக மில்லை.

ஆகையால், கிறிஸ்துவின் சபை இப்பூமியில் என்ன ஆகிறது என்பது முக்கியமே அல்ல. பூமியில் இதற்கு என்ன மரியாதை இருக் கிறது, இதை எத்தனைபேர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமேயில்லை. இறுதி நாளில் ஜெயங்கொள்வது 'கிறிஸ்துவின் சபை' மாத்திரமே.

எனதருமை நண்பரே! நான் நேசித்து மதிக்கும் வாசகரே! நீங்கள் எந்த சபையில் அங்கம் வகிக்கிறீர்கள்? கிறிஸ்துவின் சபையிலா அல்லது ஏதாவதொரு கிறிஸ்தவ சபையிலா? மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இவ்விரண்டிற்கும் உண்டு. இந்த வேறுபாட்டைப் பார்க்க தொடர்ந்து மறுப்பீர்களானால், உங்களுக்குப் பரலோக பாக்கியமும் மறுக்கப்படும். உங்கள் நித்தியத்தைத் தீர்மானிப்பது, இப்பூமியில் நீங்கள் எடுக்கும் முடிவு தான் என்பது நினைவில் இருக்கட்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் சபை பிதாவாகிய தேவனாலே திட்டமிடப் பட்ட சபையில், பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட சபையில், இயேசுவின் இரத்தத்தாலே வாங்கப்பட்ட சபையில், முதல் நூற்றாண்டிலே பிரசங்கிக்கப்பட்ட சபையில், கவிரக்க மற்ற முறையில் துன்புறுத்தப்பட்டும் நிலைத்திருக்கும் சபையில், ஜெயங் கொண்டு நித்திய நித்தியமாய் இருக்கப்போகும் சபையில் அங்கம் வகிக்க உங்களை ஊக்கப்படுத்துகிறேன். உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

கர்த்தர் உங்களோடிருந்து ஒரு மிகச் சிறந்த முடிவை எடுக்க இரக்கம் காட்டுவாராக! ஆமென்.

EZS ராஜநாயகம்

## "இராஜ்யமும், சபையும் ஒன்றே"

அன்றியும் அவர் அவர்களை நோக்கி இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.

(மாற்கு. 9 : 1)

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

(கொலோ. 1 : 13)

# மாய வித்தைக்காரனான சீமோனுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை மறுக்கப்பட்டது ஏன்?

பரிசுத்த ஆவியானவரின் பணி அல்லது கிரியை என்னும் தொடரின் பத்தாவது பாடத்தை, மாயவித்தைக்காரன் சீமோனுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை மறுக்கப்பட்டது ஏன் என்ற கேள்வியுடன் தொடங்குகிறோம்.

சமாரிய நாட்டு மக்களுக்குக் கிறிஸ்துவைப் போதிக்க பிலிப்பு எவ்வாறு சமாரியாவுக்குச் சென்றான் என கடந்த பாடத்தில் பார்த்தோம். அக்கதையின் சுருக்கத்தை இங்கு தருவதைவிட, வசனப்பகுதியைப் படித்து என்ன நடந்தது எனக் காண்போம் : "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர் வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சீமோன் என்று பேர் கொண்ட ஒரு மனிதன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக் கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவி கொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப் பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவனுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக் கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்த

ராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்ட போது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டு வந்து; நான் எவன் மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி : தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்த படியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாக இராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள் ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன் : நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான். இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்ன பின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்." (அப். 8 : 6 - 25)

வசனத்தின் நீளமான ஒரு தொடராக இது இருந்த போதிலும், என்னதான் நடந்தது என்பது பற்றிய துல்லியமான முழு விவரத்தையும் உங்கள் முன்பு கொண்டு வர விரும்பினேன்.

முதலில், பிலிப்பு என்ற பிரசங்கி சமாரியாவுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு கிறிஸ்துவை அறிவித்தார். அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அளித்த ஏழு பேர்களில் பிலிப்பும் ஒருவர். அந்த வல்லமையைக் காட்ட, தனது போதகப் பணியுடன் கெட்ட ஆவிகளை விரட்டுவது போன்றபல அற்புதங்களையும் அவர்களிடத்தில் செய்தார்.

இவை அனைத்தின் விளைவாக, தேவனின் இராஜ்ஜியத்தைப் பற்றிய காரியங்களை பிலிப்பு போதித்த போது, பலர் விசுவாசித்து, ஆணும் பெண்ணுமாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெற்றனர்.

சமாரியர்கள் மத்தியிலே செல்வாக்கான மற்றும் ஒரு மனிதன் அங்கிருந்தான். அவன் மாய வித்தைக்காரனான சீமோன் என்பவனாகும் மக்கள் அனைவரும் அவனை பெரிய மனிதன் என எண்ணும் அளவிற்கு சகலரையும் அவன் ஏமாற்றி வைத்திருந்தான். இப்போது, நற்செய்தியைக் கேட்டு, அற்புதங்கள் செய்யப்படுவதையும் கண்ட பின்னர், அவனும் தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்பி, அவ்வாறே செய்தான்.

அந்த சமயத்திலே எருசலேமில் தங்கியிருந்த அப்போஸ்தலர்கள் வரை இந்த நற்செய்தி எட்டியது. எனவே, பேதுருவும் யோவானும் அம்மக்களுக்காக ஜெபம் பண்ணவும், கைகளை அவர்கள் மேல் வைத்து பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக் கொள்ளத் தக்கதாகவும் சமாரியாவுக்குச் சென்றனர். சீமோன் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களின் எண்ணிக்கையில் ஒருவனாக இல்லை. ஆனால் அங்கு நடந்தவற்றிற்கு அவன் சாட்சியாக இருந்தான். தானும் பரிசுத்த ஆவியின் வல்லமையை அடையத்தக்கதாக, அப்போஸ்தலர்கள் தன் மேல் கைகளை வைக்கவேண்டுமென அவர்களிடம் வேண்டிக் கொள்ளுவதற்குப் பதிலாக, அவர்களுக்குப் பணம் கொடுக்க முன் வந்தான். ஒருவேளை, அவன் தேவைகளைப் பெற்றுக் கொள்ள, சம்பந்தப்பட்டவர்களுக்கு லஞ்சம் கொடுப்பது அவனுக்கு மிகவும் பழக்கமான ஒரு செயலாக இருந்திருக்கும்; எனவே வழக்கம் போல, அதே முறையைப் பின்பற்றி, இந்த வல்லமையைப் பெற அப்போஸ்தலர்களுக்கு லஞ்சம் கொடுக்க முன் வந்துள்ளான். ஏற்கனவே, அவனுடைய மாய வித்தைகள் அல்லது மந்திர தந்திரங்கள் வழியாக மக்கள் மத்தியில் பெரிய மனிதனாகக் காட்சியளிப்பவன், இந்த பரிசுத்த ஆவியின் வல்லமையையும் பெற்றுக் கொண்டால் உண்மையிலேயே பெரிய மனிதனாக மாறிவிடலாம் என்று அவன் எண்ணினான்.

அப்போஸ்தலர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற போது சீமோன் அவர்களிடம் "நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான்." அந்த வல்லமையை தான் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ணியதோடு மட்டுமல்லாமல், அதை பிறருக்குக் கொடுக்கக் கூடிய சக்தியும் தனக்குக் கிடைக்கும் என்று அவன் எண்ணினான். இந்த மாதிரியான காரணத்திற்காகத்தான், இப்படிப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட வல்லமையை பிறருக்கு

அவர்கள் கொடுக்க முடியாதிருந்தது. அவ்வாறு மற்றவர்களுக்கு அந்த வல்லமையை அளிக்கும் சக்தியை அவர்கள் அடைந்திருப்பார்களே யானால், லஞ்சம் பெற்றுக் கொண்டு அதை பிறருக்கு அளிக்கும் சோதனையும் அவர்களுக்கு வந்திருக்கும். அல்லது அந்த வல்லமையின் முக்கியத்துவம் எதுவும் அறியாது, அவர்களுடைய நண்பர்கள், உறவி னர்கள் என சகலருக்கும் கொடுத்திருக்கக்கூடும்.

ஆனால் சீமோனின் லஞ்சம் கொடுக்கும் முயற்சி பலிக்கவில்லை. "பேதுரு அவனை நோக்கி தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோட கூட நாசமாகப் போகக்கடவது" என்றான். (அப். 8:20) எனவே, இது அனைத்தும் நடக்கும் விதத்தை முற்றிலும் அவன் தவறாகப் புரிந்து கொண்டதைப் பற்றியும், தேவனுடைய கொடையை நிச்சயமாகப் பணத்தால் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையும் குறித்து பேதுரு அவனுக்கு விளக்குகிறார். பின்னர், அவனைக் கண்டிக் கிறார்; அவனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாக இராதபடியால் அவனது துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, அவனுடைய இருதயத்தின் எண்ணம் மன்னிக்கப்பட, தேவனை நோக்கி வேண்டிக் கொள்ளச் சொல்லுகிறார். "நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்" என பேதுரு சொல்லுகிறார். (அப். 8 :23) வேறு விதமாகக் கூறினால், அவன் எவ்வளவு கீழ்த்தரமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரத்திற்குச் சென்று விட்டிருந்தான். அவன் பெரும் குற்றமிழைத்திருந்தான்.

நற்செய்தியைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படித்திருந்தபடியால், சீமோனிடம் பேதுரு இதைச் சொல்ல முடிந்தது. அதாவது, சபையில் ஒரு அங்கத்தினராகவும் கிறிஸ்தவனாகவும் இருந்து, பாவஞ் செய்திருந்தப டியால், மீண்டுமாக நற்செய்திக்கு அவன் கீழ்ப்படிய வேண்டிய அவசி யமில்லாதிருந்தது. அவன் தேவனுடைய ஒரு பிள்ளையாக இருந்ததால், அவனுடைய பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, தனது பாவத்தை மன்னிக்க தேவனிடம் வேண்டுவது அவனுக்குப் போதுமா னதாக இருந்தது. பேதுரு கடிந்து கொள்ளும் போது, சீமோன் ஆத்திரப் படாமல் தனது குற்றத்தை உணர்ந்தவனாக, பேதுருவை நோக்கி : "நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான்." (அப். 8:24) அதன் பின்னர், பேதுருவும் யோவானும் எருசலேமுக்குத் திரும் பினர். பிலிப்பு வேறு பக்கமாகச் சென்றான். சீமோனுடைய நிலை என்ன? பேதுரு அவனைக் கண்டித்து, பின்னர் அவனுடைய பாவம்

மன்னிக்கப்பட தேவனிடத்தில் வேண்டிக் கொள் எனக் கேட்டுக் கொண்டபோது, சீமோன் தனது பாவத்தை ஒப்புக் கொண்டு, தன் பேரில் அவ்விதக் காரியங்கள் எதுவும் நேரிடாதபடி தனக்காக ஜெபம் செய்ய பேதுருவிடம் கேட்டுக் கொண்டதாலும், நிச்சயமாக தனது முந்தைய நிலைக்குத் திரும்பி, இப்போது மீண்டுமாக சீமோன் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருக்க வேண்டுமென்று நாம் யூகித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படியானால், அதன் பின்னர் அப்போஸ்தலர்கள் தங்களுடைய கைகளை சீமோன் மேல் வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவன் பெற்றுக் கொள்ளச் செய்தார்களா? இல்லை, அதைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. என்றாலும் அவனைப் பொறுத்தவரையில் பரிசுத்த ஆவியின் வல்லமையை அவன் பெற்றுக் கொண்டிருந்தால், அதைத் தவறாகப் பயன்படுத்தும் சோதனையிலிருந்து மீண்டிருப்பானா என்பது ஒரு கேள்வி. ஒரு அறிஞர் கூறயிது போல, "ஒரு வங்கியை கொள்ளையடித்தற்காக ஒருவன் மனஸ்தாபப்படும் போது அவனை மன்னிக்கலாம்; அதற்காக அதே நபரை அந்த வங்கியில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் கேஷியர் பதவியில் அமர்த்த முடியாது."

கைகளை வைத்து பரிசுத்த ஆவியானவரைப் பெறும் அளவானது, ஒருவனுடைய இரட்சிப்புக்குக் கொஞ்சமும் சம்பந்தப்பட்ட காரியம் அல்ல. ஆனால், அந்த நாளிலே கர்த்தரின் காரியங்களைத் தீவிரமாகக் கவனிக்கும் ஊழியத்தைச் செய்ய, அப்போஸ்தலர்களால் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றுக் கொள்ள கர்த்தரின் சில மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்று அவ்வாறான அற்புத அடையாளங்களை நாம் சார்ந்திருக்க வேண்டியதில்லை. ஏனென்றால், தேவனின் விருப்பத்தை, வீழ்ந்துபோன உலகத்திற்கு நாம் அறிவிக்கச் செல்லும் போது, நமக்கும் சகல மக்களுக்கும் அதை வெளிப்படுத்த புதிய ஏற்பாடு இருக்கிறது.

J.C. Choate

அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நியில் பேசுகிறோம்.

II கொரி. 2 : 17

## பெண்கள் பகுதி

# பொறாமை - போட்டி

" . . . . . . உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்". (லூக்கா 22:26).

"அம்மா! அம்மா!" எனக் கத்திக் கொண்டே வீட்டிற்குள் ஓடிவந்த அசிமா, ". . . . . அந்தோணியும் தாமசும் சண்டை போட்டுக்கிட்டிருக்காங்க . . . வந்து நிறுத்துங்க அம்மா" என மூச்சிரைக்க கூவினான்.

அசிமாவைப் பின்பற்றி தெருவுக்கு ஓடிவந்தாள் தாய்மேரி. சண்டை பிடித்துக் கொண்டிருக்கும் தனது இரு பையன்களையும் சுற்றி ஒரு சிறுவர் கூட்டம்; அதில் சிலர் அந்தோணிக்கு சாதகமாகவும், மற்றும் சிலர் தாமசுக்குப் பரிந்து கொண்டும் பேசி சண்டையை முடுக்கிவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்ட மேரி கூட்டத்தை விலக்கிக் கொண்டு நடுவில் புகுந்தாள், "அந்தோணி! தாமஸ்! வெட்கம் . . . வெட்கம் . . . நீங்க இரண்டு பேரும் என்ன செய்துக்கிட்டிருக்கீங்க?"

அந்தோணி மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது; தாமஸுக்கோ கண் வீங்கிப் போயிருந்தது. "பையன்களா! உங்களைப் பார்க்க எனக்கு ரொம்பவும் அதிர்ச்சியாயிருக்கு. நீங்க ஏன் சண்டை பிடிக்கிறீங்க?" என்று கேட்டாள் மேரி.

தனது மூக்கைத் துடைத்துக் கொண்டே குரோதமாக தாமஸைப் பார்த்தான் அந்தோணி. "நாங்க பந்து விளையாடப் போனோம். நான் வீடராயிருக்க விரும்பினோம். நான் தான் தாமஸை விட நல்லா விளையாடுவேன் . . அதனால தான் நான் வீடராயிருக்கணும்."

"இல்லை . . . இல்லை. . . " என்று கோபமாக அதை மறுத்தான் தாமஸ். "நீ ஒன்றும் கெட்டிக்காரன் இல்ல. நான் தான் உன்னைவிட நல்லா விளையாடுரேன்னு. எல்லா பசங்களும் சொல்றாங்க . . . நான் தான் வீடராக இருக்கப் போறேன். நீ இல்லை".

"அந்தோணி! தாமஸ்! இங்கே வாங்க இரண்டு பேரும்" என அவர்களை அழைத்து தனது இருபக்கமும் இருவரையும் உட்கார வைத்துக் கொண்டாள் மேரி. மற்ற சிறுவர்களையும் தன்னைச் சுற்றிலுமாக தரையில்

அமர வைத்தாள். பின்னர், "நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்!" என்ற பீடிகை யுடன் ஆரம்பித்தாள்:

"இயேசுவும் அவருடைய நண்பர்களும் ஒரு நாள் சாலை யிலே நடந்து போய்க் கொண்டி ருந்தனர். அப்போது அவருடைய நண்பர்கள் ஒருவருக்கொருவர் சண்டை பிடிக்க ஆரம்பித்தனர். எதைப் பற்றி சண்டை தெரியுமா? நம்மில் யார் சிறந்தவன், யார் முதலாமவன் என்பது தான் சண்டைக்குக் காரணம். தாங்கள் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறான ஒன்றை இயேசு அவர்க ளிடம் சொன்னார்: " எவனா கிலும் முதல்வனாயிருக்க விரும் பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக் கடவன் . . ." (மாற்கு 9:35), என அவர்களிடம் கூறினார்.

உண்மையிலேயே பெரியோ ராக இருப்பவர்கள் முதலாவது இடத்திற்காக சண்டை போட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள், அல்லது தம்மை ரொம்ப முக்கியத் துவம் பெற்றவராகக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்கள் பின் தங்கிக் கொண்டு, மற்றவர்களை முதலில் போக அனுமதிப்பார்கள் என்று அதற்கு அர்த்தம். ஒரு வேலைக்காரனைப் போல மற்றவர்களுக்காக எதை யும் செய்ய அவர்கள் விரும்புவர்; ஏனெனில் அவர்கள் பிறர்மேல் பொறாமை கொள்ளாதவர்கள், அல்லது முதல் இடத் தைப் பெற போட்டியோ சண் டையோ போடாதவர்கள்.

தங்களில் பெரியவன் யார் என்ற போட்டி இயேசுவின் நண் பர்களுக்கிடையே நிலவியதை சுவிசேஷத்தில் வேறு ஒரு இடத் தில் நாம் காணமுடிகிறது. உலகம் முழுவதையும் ஆளும் அரசனாக இயேசுவை அவர்கள் எதிர்பார்த் தனர்; அவரது அந்த அரசில் தாங்கள் முக்கிய இடத்தை வகிக்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் விரும்பினர். "புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகி றார்கள் . . . . உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது; உங் களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணி விடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்" என இயேசு விளக்கினார். (லூக்கா 22:24-26).

"எனவே, இயேசு கூறுவதைப் போல நீங்கள் நடக்கவும், ஒருவரோடு ஒருவர் இணைந்து செல்லவும், உண்மையிலேயே "சிறந்தவன்" ஆகவும் இருக்க நீங்கள் விரும்பினால், மற்றவர் களைப் பார்த்து, "இல்லை . . . இல்லை . . . நீங்களே தலைவராக இருங்கள்" என்று நீங்கள் ஒவ்வொருவரும் கூறுவீர்கள். அப்படிச் செய்தால், ஒருவருக்கொ ருவர் விட்டுக் கொடுக்க மறுத்து நீங்கள் சண்டை போட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, ஒருவரோடு ஒருவர் மகிழ்ச்சியாக விளையாடுவீர்கள்.

இயேசு தமது சீடர்களுக்குக் கற்பித்த அந்தப் பாடத்தை, இன்று இவ்வுலகில் வாழும் பல மனிதர்கள் கற்றிருக்கவில்லை. ஒவ்வொரு இடத்திலும் பொறாமையும் போட்டியும் தலைதூக்கி நின்று, அதன் விளைவாக மக்கள் நேர்மையற்றதும், பிறருக்குத் தீங்கிழைத்து, அவர்களைப் பின் தள்ளி தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ளும் செயல்களையும் செய்து வருகின்றனர்.

இத்தகைய தவறான நிலை பற்றி பெற்றோர் உணருவது அவசியமாகிறது. தங்கள் குழந்தைகளிடமும் இம்மாதிரியான குணங்கள் தோற்றிக் கொள்ளாமல் கவனிக்க வேண்டும். பின்னர், இயேசு தம்மைப் பின்பற்றியவர்களிடம் இத்தகைய நிலையை விரும்பவில்லை என்பதை பொறுமையாகவும் தொடர்ந்தும் கற்பிக்க வேண்டியது பெற்றோர்களின் கடமையாகிறது. பல வேளைகளில், அப்போஸ்தலர்களிடையே இதே போன்ற பிரச்சனை தலைதூக்கியது உண்டு. அந்தச் சமயங்களில் எல்லாம் இயேசு அவர்களைத் திருத்தியதோடு, தாழ்ச்சியும் ஊழியஞ் செய்வதுமே தாம் விரும்பும் குணங்கள் என அவர்களுக்குக் கற்பித்தார்.

தமது வழிகாட்டும் குணநலன்களைப் பற்றி பல விதமாக இயேசு விளக்கினார் :

". . . உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும்,

தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்".- (லூக்கா 22 : 24 -26).

". . . . எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன் . . ."- (மாற்கு 9 : 35).

"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன் -அப்படியே மனிதக் குமாரனும் ஊழியங் கொள்ளும் படி வாரமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." (மத்தேயு 20 : 25 -28).

யாக்கோபு, யோவான் ஆகியோருடைய தாய் கூட இயேசுவிடம் வந்து, அவருடைய ராஜ்யத்தில் ஒரு நாள் அவர் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் போது, தனது இரண்டு குமாரர்களில் ஒருவனை அவருடைய வலது பாரிசத்திலும் மற்றவனை இடது பாரிசத்திலும் அமர்த்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டபோது, "நீ எதைக் கேட்கிறாய் என உனக்குத் தெரியவில்லை" என இயேசு அவளுக்

குப் பதிலளித்தார். ஆனால் நடந்த காரியங்களை மற்ற சீடர்கள் அறிந்தபோது, ". . . அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள்" என சுவிசேஷம் கூறுகிறது. (மத். 20 : 24).

போட்டி - பொறாமை - எதிர்ப்பு - புறங்கூறல் - தற்பெருமை - பிறரைக் கேவலமாகப் பேசுதல் - போன்ற எல்லா நிலைகளும் அற்பக் குணம் கொண்ட, பக்குவமற்ற மனிதர்களை தோலுரித்துக் காட்டுகின்றன. இவை தேவனுடைய பிள்ளைகளுக்கோ, அல்லது ஆவியில் பக்குவமடைந்த மக்களுக்கோ சம்பந்தப்பட்ட குணங்கள் அல்ல. என்றாலும், மனிதனுடைய இயற்கைக் குணங்களில் இவை ஒரு பகுதியாக இருப்பதால், சகல மக்களும் எப்போதும் இவைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதே காரணத்திற்காகத்தான் உண்மையிலேயே பெரிய மனிதர்களாக இருப்பவர்கள் முதன்மையான இடத்திற்காகப் போட்டி போடவோ, பிறர் தங்களைப் புகழவேண்டுமென்றும் ஊழியஞ் செய்ய வேண்டுமென்றும் எதிர்பார்க்கவோ மாட்டார்கள் என்று, தங்கள் பிள்ளைகள் சிறு குழந்தைகளாக இருக்கும் போதே பெற்றோர்கள் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். உண்மையிலேயே உலகின் பெரிய மனிதர்கள் தங்கள் வீட்டையும், சுற்றுப் புறங்களையும், நாட்டையும், உலகத்தையுமே ஒரு மகிழ்ச்சியான இடமாக மாற்றும் ஊழியத்தைச் செய்ய வழிகளைத் தேடுகின்றனர்.

**B.B. CHOATE**

**R.R. NAYAGAM**

உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.

நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

(கலாத். 5 : 14, 15)

# இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நான் ஏன் விசுவாசிக்கிறேன்?

**இயேசுவின் மகத்தான உபதேசத்தினால் — அவரை தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கிறேன்.**

அவருடைய உபதேசங்களின் முறையும், செய்தியும் அதிகாரத்தைக் காட்டின. மதத்தவருகளை பயமின்றி தோலுரித்துக் காட்டி னார்; பாவங்களைச் சாடினார். கீழ்ப்படியாதவர்களுக்கு கிடைக்கவிருக்கும் நித்திய ஆக்கினையைப் பற்றி எச்சரித்தார். (மத். 15:1- 14,23:1-39 பார்க்க). வாழ்வு, ஆராதனை ஆகியவற்றின் உயர்ந்த தரங்களைப் பற்றி தமக்குச் செவி சாய்த்தோருக்குப் போதித்து, நிலையான தேர்வு செய்ய அவர்களுக்கு உதவினார். கலிலேய மலையின் மேல் போதித்த பின்னர்,". . . அவர் வேதபாரகரைப் போல போதி யாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்". (மத். 7 : 28 - 29). ஒரு தடவை சில மதத் தலைவர்கள் இயேசுவை கைது செய்ய சில சேவகர்களை அனுப்பினர். ஆனால் அந்த சேவகர்கள் இயேசுவின் போதனையை சிறிது நேரம் கேட்டு விட்டு, அவரை ஒன்றும் செய்யாமல் திரும்பிப் போனார்கள். அவர்களுடைய தலைவர்கள், ". . . நீங்கள் அவனை ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்டார்கள். சேவகர் பிரதியுத்தரமாக : அந்த மனிதன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்". (யோவான் 7 : 45, 46)

அவர் பேசின ஒவ்வொரு வார்த்தையும் பூரணமான ஞானத்தை வெளிப்படுத்தியது. அவருடைய வார்த்தைகள் ஒரு போதும் ஒன்றுக் கொன்று முரண்படவில்லை. கேள்விகளில் அவரை சிக்க வைக்க எதிரிகள் முயன்றபோது, சத்தியத்தின் வழியிலான பதில்களால் அவர்களை வென்றார். அல்லது அவர்கள் விரித்த வலையிலேயே புழுக்களைப் போல அவர்களை நெளிய விட்டுவிட்டார். (மத். 19 : 2 - 9; 22 : 15 - 46). அவருடைய வல்லமையான உவமைகளில், உலகத்துக் கதைகளில் உன்னதத்தின் உணவைப் பொதிந்து அளித்து, மக்களின் ஆத்துமாக்களுக்கு உணவு ஊட்டினார். அவருடைய செய்தியை பாமர மக்களும் புரிந்து கொண்டனர். ஆனால் பல 'ஞானிகளோ" புரியவில்லை. (மத். 11:25 : 26; 13 : 10 -12).

அவருடைய உபதேசங்களில் சில, அவருடைய தீர்க்கதரிசனங்களைக் காட்டின. அவருடைய மரணத்தைப் பற்றியும், உயிர்ப்பு பற்றியும், அவை நடைபெறுவதற்கு வெகு நாட்களுக்கு முன்னரே விவரமாக அவர் கூறினார். (மத். 16:21; 20 : 17 - 19). ரோமப் படைகளால் கி.பி. 70ம் ஆண்டு நடத்தப்பட்ட எருசலேமின் அழிவைப் பற்றி அவர் முன்னுரைத்தார். (மத். 24:1 - 22).

இயேசுவின் உபதேசங்கள் அவருடைய அன்பைக் காட்டுகின்றன; தேவனையும் பிறமக்களையும் எவ்வாறு நேசிக்க வேண்டும் என்பதை அவை நமக்குக் காட்டுகின்றன. நமது ஆராதனை, ஊழியம் ஆகியவற்றின் நோக்கம், நம்மை மகிமைப்படுத்துவதாக இல்லாமல், தேவனை மகிமைப்படுத்துவதாகவும் மக்களுக்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும் என நமக்குக் கூறுகிறார். (மத். 6 : 1-18; 23 : 1 - 12; - மத். 5 : 16; 25:31-46; யோ. 4 : 24; லூக்கா 11 :28). நேர்மை, நன்னடத்தை, சுயநலமின்மை, பாரபட்சமில்லாது நடத்தல், மன்னிக்கும் தன்மை, கருணை ஆகிய நற்குணங்களுடன் நாம் நடக்க வேண்டுமென அவர் உபதேசிக்கிறார். அவர் நம்மை வழி நடத்துகிறார். "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கல் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்." (மத். 5 : 44 - 45). இயேசுவின் மகத்தான உபதேசங்கள் அவரைத் தேவனின் குமாரன் என்று நிரூபிக்கின்றன.

அவருடைய சொந்த உரிமை கொண்டாடுதலின் காரணத்தால் இயேசுவை தேவனுடைய குமாரன் என நான் விசுவாசிக்கிறேன்.

இயேசு ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தார்; ஆனால் அவர் தேவனின் குமாரன் அல்ல என்று சில மக்கள் கூறுகின்றனர். அது சாத்தியமல்ல. அவரை அடையாளம் காண இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன : 1) அவர் ஒரு கள்ளத் தீர்க்கதரிசியும் பொய்யான உரிமைகள் கொண்டாடிய சாதாரண மனிதனாகவும் இருந்தார்; அல்லது 2) அவர் உண்மையான தீர்க்கதரிசியும், அவர் உரிமை கொண்டாடுவதைப் போல, தேவனுடைய குமாரனாகவும் இருந்தார்.

தேவனை "பிதா" என்றும் "என்னுடைய பிதா" என்றும், தம்மைத் தாமே "குமாரன்" என்றும் அடிக்கடி அவர் குறிப்பிட்டார். (யோவான் 5 : 17 - 18 ; மத். 11:25-27). பிறமக்களின் பிதா என்றும் தேவனைக் குறிப்பிட்டு அவர் சொன்னார். (மத். 6 : 9; 7 : 11). ஆனால் தம்மைப் பற்றி தெளிவாக "குமாரன்" என மிகவும் விசேஷமாகவும், ஒப்பற்ற வகையிலும் குறிப்பிட்டார். தேவனின் ஒரே பரிசுத்த குமாரன் என அவர் உரிமை கொண்டாடுவதை அவருடைய அறிவிப்புகள் பறை சாற்றுகின்றன.

உலகம் உண்டாக்கப்படும் முன்னர், பிதாவுடன் அவர் பரலோகத்தில் இருந்தார் என இயேசு உபதேசித்தார். ". . . நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்" என்றும், (யோ. 6 : 38), ". . . நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன். . ." (யோ. 8 : 42) என்றும் அவர் கூறினார். கி.மு. 1900 ஆண்டு வாக்கில் ஆபிரகாம் வாழ்ந்தார். ஆனால் தாம் ஆபிரகாமுக்கும் முன்பே இருந்ததாக இயேசு கூறினார். ". . . . ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்". (யோ. 8 : 58). இப்பூமியில் தமது பணி முடிவுற்ற வேளையில், தேவனிடம் இயேசு ஜெபித்தார்: "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்". (யோவான் 17 : 5).

பிதாவோடு அவருடைய ஐக்கியத்தைப் பற்றி இயேசு கூறும்போது, தாம் தேவனுடைய பரிசுத்தமான குமாரன் என்று இயேசு தெளிவாக சொந்தம் பாராட்டினார். "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்". (யோவான் 10 : 30). ". . . . என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் . . . " (யோவான் 14:9) என இயேசு பிரகடனப்படுத்தினார். இப்படியாக, பிதாவுடனாகிய தமது உறவு பற்றி உரிமை கொண்டாடிய போதிலும், ". . . என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என தெளிவாகக் கூறினார். (யோவான் 14 : 28). "குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" (யோவான் 5:23) என இயேசு உபதேசித்தார். அவருடைய உயிர்ப்புக்குப்பின், தம்மை தேவனுடைய குமாரன் என தெளிவாகக் கூறினார் : ". . . . வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே

அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்." (மத்தேயு 28 : 18 - 20).

இயேசுவை தேவனுடைய குமாரன் என பல சீடர்கள் அழைத்தனர். நாத்தான் வேல் கூறினார் : " . . .ரபீ, நீர் தேவனுடைய குமாரன் . . . "(யோவான் 1 : 49). இயேசு தண்ணீரின் மேல் நடந்து தங்களை நோக்கி வருவதைக் கண்டஅவருடைய சீடர்கள்," . . . மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள்." (மத்தேயு 14 : 33). மார்த்தா, " . . . . நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்". (யோவான் 11: 27). பேதுரு, " . . . . நீர் "இயேசு அவனை நோக்கி : யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றார். (மத்தேயு 16 : 16, 17). தம்மை தேவனின் குமாரன் என அவருடைய சீடர்கள் அழைத்ததற்காக இயேசு அவர்களை கடிந்து கொள்ளவில்லை. அந்த மரியாதையை உண்மையும் சரியானதும் என்று அவர் ஏற்றுக் கொண்டார். உண்மையில், தம்மைத்தாமே தேவனுடைய குமாரன் என இயேசு கூறினார்: "மரித்தோர் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (யோவான் 5 : 25). அவருடைய சொந்த சத்தத்தைப் பற்றியே அவர் கூறுவதாக பிற வசனங்கள் தெரியப்படுத்துகின்றன. (யோவான் 5 : 24; 11:25-26). தம்மை அடையாளம் காணுவதில் நமக்கு எவ்வித சந்தேகத்தையும் இயேசு விட்டு வைக்கவில்லை.

பரலோகத்திலிருந்து கேட்ட தேவனுடைய சத்தத்தால், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நான் விசுவாசிக்கிறேன். யோவான் இயேசுவுக்கு திருமுழுக்கு கொடுத்த பின்னர், " . . . . வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி : இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாக இருக்கிறேன் என்று உரைத்தது." (மத்தேயு 3 : 17). பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியவர்களோடு இயேசு ஒரு மலைமீது அமர்ந்திருந்த போது, ". . . இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று." (மத்தேயு 17 : 5).

(அடுத்த இதழில் முடியும்)

# இரட்சிக்கப்பட நாம என்ன செய்யவேண்டும்?

"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர் களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்"- (அப். 2 : 37).

## 1. நற்செய்தியைக் கேளுங்கள்

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்"- (எபே. 1 : 13).

## 2. நற்செய்தியை விசுவாசியுங்கள் :

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக் கிறது."- (ரோமர் 1 : 16).

## 3. நற்செய்திக்குக் கீழ்ப்படியுங்கள் :

"முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமையாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வ மாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்." - (ரோமர் 6 : 17).

## 4. தேவனிடத்தில் திரும்புங்கள் :

"உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந் திரும்பி குணப்படுங்கள்". - (அப். 3 : 20).

"தேவனுக் கேற்ற துக்கம் . . . இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது . . . ."- (2 கொரி. 7 : 10).

## 5. கிறிஸ்துவே கர்த்தர் என அறிக்கை செய்யுங்கள் :

" என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்". - (ரோமர் 10 : 9).

## 6. கிறிஸ்துவுக்குள் திருமுழுக்கு பெறுங்கள் :

இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்"- (அப். 22 : 16).

"... ஞானஸ்நானமானது ... இப்பொழுது நம்மையும் ... இரட்சிக்கிறது." - (1 பேதுரு 3 : 21).

## 7. கிறிஸ்துவில் உறுதியாய்த் தரித்திருங்கள் :

" அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". -(அப். 2 : 42).

"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு . . . விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்." - (எபி. 12 : 3).

தமிழில் : S.S. ராஜன்

## -: இன்றே இரட்சிப்படையுங்கள் :-

அநுக்கிரக காலத்திலே நான் உனக்கு செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணியநாள்.

II கொரி 6 : 2

## யெகோவா சாட்சிகள் - 6

# கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்!

யெகோவா சாட்சியினரின் கள்ள உபதேசங்களில் மிகவும் அபாய கரமானது கிறிஸ்து தெய்வீகம் நிறைந்தவரல்ல என்பதாகும் இருந்தும் எவ்வளவு மதியீனமாக தங்கள் தவறை நியாயப்படுத்த இக்கூட்டத்தார் முயலுகின்றனர் என்பதை நாம் வேதத்தின் வெளிச்சத்திலே கண்டோம் மொழியாக்கத்தில் குளறுபடிகளை செலுத்தியிருப்பதோடு தாங்களே மூல பாஷைகளில் தேறினவர்களாக தங்களைக் காட்டிக் கொள்கின்றனர். ஆனால் உண்மையில் மூல பாஷையை அறியாதவர்கள் இவர்கள் என்பதை கடந்த இதழில் நிரூபித்தோம்.

இப்பொழுது, சில வசனங்களை மட்டும் கொண்டு, பிதாவாகிய தேவனோடு கிறிஸ்துவும் எப்படி தெய்வீகம் நிறைந்தவராக இருக்கிறார் என்பதையும், அவரும்'யெகோவா' என்றும், 'சர்வ' வல்லமையுள்ளவரென்றும் அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும் காண்போம்.

பழைய ஏற்பாட்டில் 'யெகோவா' எனும் நாமத்திலே தமது தெய்வீகத்தை விளங்கப் பண்ணின கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் இயேசு என்று அழைக்கப்படுகிறார்.

யாத்திராகமத்தில் மோசேயை தேவன் எகிப்துக்கு அனுப்பும்போது, இருக்கிறேன்' என்பவர் அனுப்பினதாகப் போய்ச் சொல் என்கிறார். (யாத். 3:14) இந்த'இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்ற பதம், ' யெகோவா' எனும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து தம்மைக் குறித்து பயன் படுத்துவதை காண்கிறோம். உதாரணமாக யோவான் 8:56-59-ல் யாத். 3:14-ன் பொருளிலே பேசப்படுவதை காணலாம். இங்கு கிறிஸ்து தாமே பிதாவாகிய தேவன் என்று கூறவில்லை. ஆனால்'இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்ற பதத்தில் கிறிஸ்து தம்மைக் குறித்துப் பேசுவதைக் காணுங்கள். 'உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான், என்றார். அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமை கண்டாயோ என்றார்கள் அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு

முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது அவர்மேல் எறியும்படி கற்களை எடுத்துக் கொண்டார்கள். இயேசு மறைந்து அவர்கள் நடுவே கடந்து தேவாலயத்தை விட்டுப் போனார்'.

'ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்' என்ற இப்பதத்தை யெகோவா சாட்சியினர் தங்கள் மொழி பெயர்ப்பில் பயன்படுத்தி உள்ளனர். இருந்தும் கிறிஸ்துவும் யெகோவா என்னும் பதத்தில் அழைக்கப்பட்டிருக்கிறதை இவர்கள் மறுப்பது வேடிக்கை அன்பு வாசகரே, யோவான் 1:1-ஐயும் 8:58-யும் மறுதலிக்கும் இக்கூட்டத்திலா உங்கள் நம்பிக்கை?

அடுத்து யோவான் 18:13-13-லும் 'இருக்கிறவராகவே இருக்கிறேன்' எனும் பொருளில் கிறிஸ்து பேசும்போது, அப்பொருளில் இருந்த மகிமையைக் காண்கிறோம். மேற்படி வசனத்தில் யூதாஸ் காரியோத் போர்ச் சேவகரோடே வருகிறான். யாரைத் தேடுகிறீர்கள் என்று கிறிஸ்து கேட்க, நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றனர். 'நான்தான்' என்று கிறிஸ்து அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். 'நான்தான்' என்று கிறிஸ்து இங்கே பயன்படுத்தியிருக்கும் பதம் 'இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்ற அதே பொருளில் பேசுவதையும் அந்த வார்த்தையில் இருந்த வல்லமையையும் காண்கிறோம். எனவே யாத். 3:14-ல் பொருள் கிறிஸ்துவுக்கும் பிற வசனங்களில் குறிக்கிறது; பிதாவாகிய தேவனுக்குரியது மட்டுமல்ல, என்பதையும், கிறிஸ்துவும் 'யெகோவா என்று அழைக்கப்படுவதையும் காண்கிறோம். ஆதலால் 'கிறிஸ்து யெகோவா என்று அழைக்கப்படவில்லை' என்ற இவர்களின் கூற்று எவ்வளவு பொய்யானது என்பதைக் காணுங்கள்.

ஏசாயா 9:6-ல், கிறிஸ்துவைக் குறித்த ஐந்து பதங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவைகளில் 'நித்திய பிதா' என்பதும், 'வல்லமையுள்ள தேவன்' என்பதும் அடங்கும். பிதாவாகிய தேவனுக்குப் பயன்படுத்தப் பட்ட பதம் கிறிஸ்துவுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள 'வல்லமையுள்ள தேவன்' என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது என்று ஒப்புக்கொள்ளும் யெகோவா சாட்சியினர், அவர் 'வல்லமையுள்ள தேவன்' மாத்திரமே, 'சர்வ வல்லமையுள்ள தேவனல்ல' என்று வாதிடுகின்றனர். வெளி. 1:8-ல் 'இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய 'சர்வ வல்லமையுள்ள' கர்த்தர் : 'நான் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்று

கிறார்,' என்று கூறப்பட்டுள்ளது. இங்கே 'சர்வ வல்லமையுள்ள கர்த்தர்' என்ற பதம் கிறிஸ்துவைக் குறிக்கிறது என்பதையும் அவரே ஆதியும், அந்தமுமானவர் (நித்தியமானவர்) என்பதையும் காட்டுகிறது. இங்கு குறிப்பிடப்படுகிற கருத்தில் பிதாவாகிய தேவனைத்தான் குறிக்கிறது என்று யெகோவா சாட்சியினர் வாதிடுகின்றனர். இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய என்பது நிச்சயமாக பிதாவாகிய தேவனைக் குறிப்பதில்லை. இரண்டாம் வருகையில் கிறிஸ்துவே வரப் போகிறார். ஆதலால் வருகிறவர் என்ற பதம் பிதாவைக் குறிப்பதில்லை. மேலும் வெளி 22:13-ல் கிறிஸ்துவையே குறிக்கிறது என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. எனவே ஏசாயா 9:6-ல் கூறப்பட்டுள்ள நித்திய பிதா என்னும் பதம் கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவரல்ல என்பதும், கிறிஸ்துவும் சர்வ வல்லமையுள்ளவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதும் உறுதியாகிறது.

மேலும் ஏசா. 40:3-ல் சொல்லப்பட்டுள்ள 'கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்,' என்கிற வாக்கியத்தை 'யெகோவாவிற்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்' என்று யெகோவா சாட்சியினரே மொழியாக்கம் செய்துள்ளனர். மத். 3:3-ல் இதன் நிறைவேற்றத்தைக் காண்கிறோம். யெகோவா சாட்சியினரும் தங்கள் மொழி பெயர்ப்பில் இதை ஒப்புக் கொண்டுள்ளனர். இருந்தும், கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்படுத்துவதைத்தான் 'யெகோவாவிற்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்' என்று கூறப்படுகிறது என்பதை மறுதலிக்கின்றனர். என்ன ஒரு பித்தலாட்டம் பாருங்கள்.

எசேக்கியேல் 44:1,2-ல், 'பின்பு அவர் என்னைக் கிழக்குக்கு எதிரே, பரிசுத்த ஸ்தலத்துக்கும் புறவாசல் வழியே திரும்பப் பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்க வேண்டும்,' என்று சொல்லப்பட்டது.

1. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் எவ்வளவு துல்லியமாக நிறைவேறியுள்ளது என்பதை நிரூபிக்க மிகவும் குறிப்பிடத்தக்க வசனம் இது. கிழக்கு வாசல் என்பது,'தங்க வாசல்' என்றும் அழைக்கப் பட்டது. இந்த வாசல் வழியாகத்தான் தமது சிலுவை மரணத்துக்கு முன் கிறிஸ்துவும் எருசலேமுக்குள் நுழைந்தார் என்று நம்பப்படுகிறது. (மத். 21:11-21) கி.பி 70க்குப் பிறகு முதலாம் உலகப் போர் வரை

எருசலேம் முஸ்லீம்களின் (துருக்கியர்களின்) ஆதிக்கத்தின் கீழ் இருந்து. கி.பி. 1543-வரை, ஸ்தேவான் வாசல் வழியாக மட்டுமே எருசலேமிற்குள் நுழைய பயன்படுத்தப்பட்டு வந்தது. கிழக்கு வாசல் வழியே கிறிஸ்துவுக்கு பிறகு யாரும் பிரவேசிக்கவில்லை. 1543-ல் முஸ்லீம்கள் தங்களை அறியாமலேயே பயனற்றுக் கிடந்த கிழக்கு வாசலைத் தடுத்து சுவர் எழுப்பி, எசேக். 44:1, 2 ஐ நிறைவேற்றினர்.

2. 'இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்' என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார். ஆகையால் இது பூட்டப்பட்டிருக்கும்' என்றும் சொல்லப்பட்டபடியே, கிறிஸ்து மத். 21:1-11-ல் எருசலேமில் நுழைந்த பின் இன்று வரை யாரும் அதின் வழியே பிரவேசிக்க இயலவில்லை. நமது கேள்வி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார் என்பது கிறிஸ்துவைக் குறித்துப் பேசப்பட்டு துல்லியமாக நிறைவேறி இருக்கும் போது யெகோவா சாட்சியினர் கிறிஸ்துவை (தேவனாகிய கர்த்தர்) யெகோவா என்று வேதத்தில் குறிப்பிடப்படவில்லை என்று எப்படி மறுதலிக்கிறார்கள் என்பது தெரியவில்லை. புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர். 9:5, கொலே. 2:9, 1 தீமோ. 3:16 அப். 20:28 போன்ற வசனங்களில் குறிப்பிடுகின்றார். எந்த வேத வசனத்தையும் புரட்டியே பேசி வரும் யெகோவா சாட்சியினர். மேற்குறித்த வசனங்களை மட்டும் நியாயமாக வியாக்கியானம் செய்வர் என்று நாம் எதிர்பார்க்க இயலுமா?

(தொடரும்) Bro. E.A. ஆறுமுகம்,
திண்டுக்கல்.

## கவலை வேண்டாம்

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

பிலிப். 4 : 6

# அவர்கள் உங்கள் கதவைத் தட்டும்

பலதரப்பட்ட வித்தியாசமான மதப்பிரிவுகளைச் சார்ந்த குழுக்களின் பிரதிநிதிகள், சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து, பல வேளைகளில் கிறிஸ்தவர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி, தங்களின் குறிப்பிட்ட பிரிவு சபை பற்றிப்பேச அனுமதி கேட்கும் அனுபவத்தைப் பெற்ற கிறிஸ்தவர்கள் இருக்கக்கூடும்.

அவ்வாறு உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்போது, நீங்கள் என்ன செய்வீர்கள்? அவர்களை உள்ளே அனுமதிக்க மறுப்பீர்களா? அல்லது அவர்களை வீட்டுக்குள் அனுமதித்து, உபசரித்து உபதேசத்தைக் கேட்பீர்களா? இல்லையென்றால், வீட்டு வாசலிலே நின்றே அவர்களிடம் விவாதம் செய்வீர்களா? அவர்களின் பேசுவது வீண் பொழுது போக்கா? எந்த சக்தியுமே அவர்களை மாற்ற இயலாத 'கொள்கை உறுதி' படைத்தவர்கள் எண்ணுகிறீர்களா?

கிறிஸ்தவர்களாகிய நீங்கள் பிறர் வீட்டுக் கதவைத் தட்டும் போது, ஏற்பட்ட அனுபவங்கள் யாவை?

இவ்வாறாக 'கதவைத்தட்டும்' பிரிவினை கூட்டத்தார் உங்கள் இல்லத்திற்கு வந்தால், நீங்கள் ஒரு வழியைக் கடைபிடிக்கலாம்; "நாம் நம்புவதை நீங்கள் ஒரு பத்து நிமிடங்களுக்குக் கேட்க தயாராக இருந்தால், அடுத்து உங்கள் பேச்சையும் நான் அதே பத்து நிமிடங்களுக்கு கேட்க தயாராக இருக்கிறேன்'' என்று ஒரு நிபந்தனையை அவர்களிடம் அறிவியுங்கள். முற்றிலும் எதிர்பாராத உங்களின் இந்த நிபந்தனை அவர்களை கொஞ்சம் நிலைகுலைய வைக்கும். ஏனெனில் அவர்களின் சரக்கை உங்களிடம் இறக்குமதி செய்யத்தான் அவர்கள் வந்தார்களேயன்றி, உங்கள் பேச்சைக் கேட்க அல்ல!

ஒருவேளை, உங்கள் நிபந்தனையை அவர்கள் ஏற்றுக் கொண்டால், பத்து நிமிடங்களில் அவர்களிடம் கீழ்க்கண்டவற்றைப் போதிக்கலாம்.

1. வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை என்பதை நான் விசுவாசிக்கிறேன். ஏனெனில்,"பரிசுத்த வேத எழுத்துக்கள் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்கது; வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதனின் தேறினவானகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி

யுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குத லுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது நான் வேதாக மத்தை கர்த்தருடைய வசனம் என விசுவாசிப்பதால். . . .

2. "நியாயப்பிரமாணத்தை மீறுகிறது பாவம்" (1 யோ. 3:4) என்றும், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாயினர்" (ரோமர் 3:23) என்றும் நம்புகிறேன். அதன் விளைவாக, "நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமை களாக ஒப்புக் கொடுத்து" விட்டபடியால், இறுதியில் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதையும் நம்புகிறேன். (ரோ. 6:23)

3. பரிசுத்தமான தேவனின் சந்நிதானத்தில், நமது சொந்த முயற்சிகள் எவற்றாலும் நம்மால் நிற்க முடியாதபடி நாம் பாவிகளாக இருப்பதை நான் விசுவாசிக்கிறேன். "நமது அக்கிரமங்களே நமது தேவனுக்கும் நமக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; நமது பாவங்களே அவர் நமக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை நமக்கு மறைக்கிறது" (ஏசாயா 59 : 2) எங்க ளுடைய அதிகமான நற்செயல்களால் "எங்களுடைய நீதிக ளெல்லாம் அழுக்கான கந்தையோல் இருக்கிறது" (ஏசாயா 64 : 6)

4. "அன்றியும் நான் பெலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்பதை நான் விசுவாசிக்கிறேன். (ரோமர் 5:6) இச்செயலால் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோ 5:8)

5. தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்து வுக்குள் அவர்களை நமக்கு ஒப்புரவாக்கினார்" என்பதையும், " நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி 5:19, 21)

6. தேவனின் இரட்சிப்பின் திட்டங்களுக்கு கீழ்ப்படிவதென்றால் நாம், "பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமை களானதினால், பரிசுத்தமாகுதல் நமக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்" (ரோமர் 6:22)

7. "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்ற இயேசு கிறிஸ்துவின் உரிமையை நான் விசுவாசிக்கிறேன். (யோ. 14:6) அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், இயேசு தனக்கு "சகல அதிகாரமும்" கொடுக்கப்பட்டிருப்பதையும், மக்களின் பாவமன் னிப்புக்கும் இரட்சிப்புக்கும் அவர் கட்டளையிட்ட யாவையும்

அவர்கள் கைக்கொள்ளுமாறு, அப்போஸ்தலர்கள் உபதேசம் பண்ணவும் உத்திரவிட்டார். (மத்தேயு 28:18-20)

8. சிறிது நாட்களுக்குப்பின் (பெந்தெகொஸ்தே நாளில்) தங்களுக்கு இடப்பட்ட கட்டளையின்படியே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் செய்தனர் என்பதை நான் நம்புகிறேன். "கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" (அப். 2:21) என அவர்கள் மக்களுக்குப் போதித்தனர். அப்போதனைகளைக் கேட்ட மக்கள், கிறிஸ்துவையும் அவருடைய நற்செய்தியையும் விசுவாசித்தால், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (அப். 2:38) என அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு கட்டளையிட்டனர் கர்த்தரின் விருப்பப்படியே இது நடந்தது. பின்னர், நாம் புதிய ஏற்பாட்டில் காண்பதைப்போல, பிற பகுதி மக்களுக்கும் அதே போன்ற இரட்சிப்பின் திட்டம் வற்புறுத்தப்பட்டது.

9. "இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப். 2:47) என்பதை நான் நம்புகிறேன். தொடர்ந்து இவ்வாறாக சபையில் சேர்த்துக் கொண்டு வருகிறார்; ஏனெனில் இதே பாவமன்னிப்பும் இரட்சிப்பின் திட்டமும் உலக முடிவு பரியந்தம் தொடருகிறது. (மத்தேயு 28:20: யூதா. 3)

10. புதிதாக எருசலேமில் நிறுவப்பட்ட சபையின் அங்கத்தினர்கள்,"அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோனியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42) என்பதை நான் விசுவாசிக்கிறேன். நாம் புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போது, எல்லா பிராந்திய சபைகளும் ஒரே காரியத்தைப் போதிக்கவும் நடத்தவும் எதிர்பார்க்கப்பட்டனர் என்பதைக் காணமுடிகிறது. "நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை ஞாபகப்படுத்த" கொரிந்து சபை அங்கத்தினர்களிடம் தீமோத்தேயுவை நான் அனுப்பும்போது அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார்.

இறுதியாக, தனது அப்போஸ்தலர்கள் மூலமாக கிறிஸ்து எதைக் கட்டளையிட்டாரோ அவற்றை மக்கள் அவ்வாறே கடைபிடிக்கும்போது, அவர்கள் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதை நான் விசுவாசிக்கிறேன். அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சபையில் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கிறார்கள்.

தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, JULY 1995
JULY 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27. KANGAYAM - 638 701